ANNAMALAI UNIVERSITY TAMIL SERIES

எட்டுத் தொகையில் ஒன்றாகிய

# ஐங்குறுநூறு

மூலமும் விளக்கவுரையும்

## Part III

## முல்லை

28340

உரையாசிரியர்:
சித்தாந்த கலாநிதி, பேராசிரியர், வித்துவான்,
திரு. ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள்,
தமிழ்த்துறைப் பேராசிரியர்,
தியாகராசர் கல்லூரி, மதுரை.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தாரால்
வெளியிடப்பெற்றது.
1958.

ஆடுகோட்பாட்டுச் சேரலாதனாலும், அதியமான் நெடுமான் அஞ்சியாலும் சிறப்பிக்கப் பெற்ற திறத்தை பதிற்றுப்பத்தும் புறநானூறும் தெரிவிக்கின்றன. இப் பாணர்கட்கு வேந்தர் ஊர்களும் மிக்க பொருளும் தந்து பாராட்டியுள்ளனர். குதிரை பூட்டிய தேர்களில் பாணர்களை ஏற்றிக் காலால் ஏழடிப் பின்சென்று வழிவிடுவது முடிவேந்தர் அந்நாளின் மேற்கொண்டிருந்த சிறப்பு முறை. யானைகளையும் அவற்றைப் பேணுதற் குரிய பொருளையும் பெருஞ்செல்வர் பாணர்கட்கு அளித்தனர். பாணர்களுள் ஆட வர்க்குப் பொன்னாற் செய்த தாமரைப் பூவும், மகளிர்க்கு மாலையும் பிற அணிகலங்களையும் வேந்தரும் செல்வரும் பரிசு நல்குவர்.

இசையும் கூத்தும் பயிலாது போர்த்துறையில் ஈடுபட்டு மற்போரிலும் நாடுகாத்தலிலும் சிறந்த பாணர்களும் உண்டு. அவருள் பாணன் என்பான் பாலியாற்றின் வடகரையில் உள்ள நாட்டில் அரசுபுரிந்தான்; "வடாஅது, வல்வேற் பாணன் நன்னாடு[1]" என்று சான்றோர் பாராட்டிக் கூறுவர்; அந்நாட்டில் பாலியாற்றின் கரையில் உள்ள பெரும்பாணப்பாடியும் பாண்மலையும் அப் பகுதியிலுள்ள கல்வெட்டுக்களால் குறிக்கப்படுகின்றன. அவன் வழிவந்தோர் வாணர் எனவும் வாணாதிராயர் எனவும் வாணதரையர் எனவும் நிலவினர்; வடார்க்காடு வட்டத்துத் திருவல்லம் கோயிலில் அவர்களுடைய கல்வெட்டுக்கள் மிகுதியாக உள்ளன. பிற்காலத்தே அவர்கள் தமிழகமுழுதும் பரவியிருந்தனர்; வாணகோவரையர் என்பாரும் பண்டைய பாணன் வழிவந்தோரே யாவர். வேறொரு பாணன் மற்போரில் சிறந்து சோழர் பேரவையில் புகழ்பெற்று விளங்கினான்; உறையூரில் வாழ்ந்த வெள்ளியன் தித்தன் போரவையில் இருந்த பாணனொடு மற்போர் செய்ய, கங்கநாட்டுப் பகுதியிலிருந்து கட்டி என்பவன்

1. அகம். 325.

வந்து, "போரவையில் ஒலிக்கும் கிணைப்பறையின் ஒலி கேட்டமாத்திரையே அஞ்சி யோடினன்" என அகப்பாட்டொன்று[1] கூறுகிறது; குடநாட்டுக்கு வடக்கிலுள்ள ஆரியநாட்டிலிருந்து பொருநன் என்பவன், குட்ட நாட்டுக் கணையன் என்பவனொடு கூடிப் பாணனொடு மற்போர் செய்ய வந்து முடிவில் பாணன் வலிக்கு ஆற்றாது, கணையன் நேரிற் கண்டு நாணுமாறு தோற்றான்.[2]

பாண்மக்களுள் இசையும் கூத்தும் பிறவும் பயிலாது தாழ்நிலையில் வாழ்ந்தோர் தூண்டில் கொண்டு சென்று மீன்பிடித்து விற்று வயிறுவளர்த்தனர். சிலர் உழுதும் உழுவித்தும் வாழ்ந்தனர்; வேறுசிலர் பனைநாரும் பனம் போழும் கொண்டு கயிறும், மீன்வலையும் கூடை சுளகு முதலியனவும் முடைந்து வாழ்ந்தனர். சிலர் விலங்குகளை வேட்டையாடி யாழ்க்கு நரம்பும் தோற்கருவிகட்குத் தோலும் அமைத்துத் தந்தனர். ஒருசிலர் செல்வர் மனைக்கும் பரத்தையர் மனைக்கும் தூதுசென்று அவரது புறத்தொழுக்கத்துக்கு வாயில்களாகப்பணிபுரிந்து வாழ்ந்தனர். வாயில்களாவாரை, "தோழி தாயே பார்ப்பான் பாங்கன், பாணன் பாடினி இளையர் விருந்தினர், கூத்தர் விறலியர் அறிவர் கண்டோர், யாத்த சிறப்பின் வாயில்கள் என்ப[3]" என்று **தொல்காப்பியம்** கூறுகிறது.

கீழ்நிலைப் பாண்மகளிர் ஆடவர் கொணர்ந்த மீன்களை நெல்லுக்கும் பிற பொருளுக்கும் விற்று வாழ்க்கை நடத்துவர். சிலமகளிர் செல்வர் மனைகளில் பணிப்பெண்களாய்த் தொண்டுசெய்வர். ஆடலில் சிறந்தோர் விறலியராகி வேந்தர் நல்கும் தலைக்கோல் பெற்று விளக்கமுற்றுத் திகழ்ந்தனர். பாடல் வல்லோர் பாடினிகளாய்ப் புகழ் பரப்பி வாழ்ந்தனர். பாணர் பலரும் மீன் பிடிக்கும் தூண்டிற்கோலும், இசைக்கும் கூத்துக்கு முரிய கருவிகளைப் பெய்த பைகளைச் சுமக்கும் காவடிக்கோலும், ஏனை

1. அகம். 226.　　2. ஷை, 386.　　3. தொல். பொ. 193.

யோர் கழைக்கோலும் தாங்கிச் செல்ல, மகளிருள் பாடினி யும் விறலியும் தலைக்கோலும் மீன்விற்போர் கழைக் கோலும் கொண்டு செல்வர். இதனால், வடநாட்டுச் சீக்கி யர் எப்போதும் கையில் வாளேந்தி இயலுவது போலப் பண்டைத் தமிழகத்துப் பாண்மக்கள் கையில் கோலேந் தித் திரிவது மரபாயிற்று. ஆதலாற்றான், பாணரைக் குறிக் கும் போது, அவர்தம் கோலை விதந்து, "தேமுதிர் சிமையக் குன்றம் பாடும், நுண்கோல் அகவுநர்[1]" என்றும், "மாக் கோல் யாழ்ப் பாண்மகனே[2]" என்றும் சான்றோர் கூறுவா ராயினர்.

பாணர்களின் செயல்வகை பற்றி, பாணர், அகவுநர் கூத்தர், கோடியர், இயவர், பொருநர் எனப் பலபெயர் களால் நூல்களில் குறிக்கப்படுவர். அவை அனைத்தும் அவரவர் செய்தொழில் காரணமாகப் பிறந்தவையே யன்றிச் சாதிப்பெயர்கள் அல்ல என்பதைத் தெளிய உணர்தல் வேண்டும். பாணர் வரலாறு தமிழ்மொழியின் ஒருசார் வரலாறாகப் பிணைந்திருத்தலின் இத்துணையும் கூறல் வேண்டிற்று. இனி, இப்பாணர்கள் தமிழ்ச்செல்வர் மனைவாழ்வில் கலந்து பணிசெய்யும் திறத்தை ஈண்டுத் தொகுக்கப்பட்டுள்ள பாட்டுக்களிற் காணலாம்.

*471.* எல்வளை நெகிழ மேனி வாடப்
பல்லிதழ் உண்கண் பனியலைக் கலங்கத்
துறந்தோன் மன்ற மறங்கெழு குரிசில்
அதுமற் றுணர்ந்தனை போலாய்
இன்னும் வருதி யென்னவர் தகவே.

இது, பருவவரவின்கண் தூதாகி வந்த பாணன் கூறிய வழித் தோழி சொல்லியது.

---

1. அகம். 208. 2. இணைமா. 150; 125.